


# நிலாவில் நிலாமதி

## சிறுவர் கதைகள்

1-5 தரம்

கேணிப்பித்தன் ச. அருளானந்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலாவில் நிலாமதி

## சிறுவர் கதைகள்

## 1-5 தரம்

கேணிப்பித்தன். ச.அருளானந்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலின் பெயர் : நிலாவில் நிலாமதி

ஆசிரியர் : ச. அருளானந்தம் (கேணிப்பித்தன்)

வகை : சிறுவர் இலக்கியம்

உரிமை : ஆசிரியருக்கு

அட்டைப் படமும் படங்களும் : ச.அ.அருள்பாஸ்கரன் M.A (Fine Arts)

முதற்பதிப்பு : 27 - 04 - 2014

வெளியீடு : அருள் வெளியீட்டகம்
37 / 7, மத்திய வீதி,
உவர்மலை - திருகோணமலை.
தொலைபேசி இல: 026-2221507.

கிடைக்குமிடம் : லங்கா புத்தகசாலை.
F.L. 14.1. டயஸ் பிளேஸ்.
குணசிங்கபுரம்.
கொழும்பு-12.
தொ.பே. இல: 011- 2341942

ISBN : 978-955-54005-0-3

விலை : ரூபாய் 160/=



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூலின் உள்ளே...............


- பூனைக் குட்டியும் தேனீயும்
- மாதவனும் மான் குட்டியும்
- உன்னால் உயர்ந்தேன்
- கொக்கரக்கோ சேவல்
- சாபம் நீங்கிய தேவதை
- நிலாவில் நிலாமதி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

நமது சமுகத்தில் வாசிப்புப் பழக்கம் அருகிக்கொண்டு வருகிறது. பிள்ளைகள் வேறு பொழுதுபோக்குகளில் ஈர்க்கப் படுகிறார்கள். சிறுவயதிலிருந்தே வாசிப்புப் பழக்கத்தை நாம் சிறுவர்களுக்கு ஏற்படுத்தினால் அவர்களின் அறிவுத்திறனை வளர்த்துக்கொள்ள முடியும். ஆசிரியர்களும், பெற்றோர்களும் உறுதுணையாக இருந்து பிள்ளைகளை வழிப்படுத்த வேண்டும்.

வாசிப்பு ஒரு மனிதனைப் பூரணமாக்குகிறது. சிந்திக்க வைக்கிறது. அத்துடன் பலவகைத் தரவுகளை அறிய வழி வகுக்கிறது. வாசிப்பு எம்மைச் சீராக வாழ்வதற்கு இட்டுச் செல்கிறது. வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிப்படுத்தும் பக்குவத்தை ஏற்படுத்துகிறது.
இன்று பாடசாலைகளில் பரிசளிப்பு விழாக்கள் நடைபெறுகின்றன. பாடசாலைகளில் விளையாட்டு விழாக்களும் நடைபெறுகினறன. அந்த வைபவங்களில் மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படுகின்றன. அவற்றைப் பார்த்தால் அழுவதா, சிரிப்பதா என்று புரியவில்லை.

விளையாட்டு விழாக்களில் வெற்றி பெற்றவர்களுக்குப் பதக்கங்களும். வெற்றிக் கிண்ணங்களும் வழங்கப் படுவது பாராட்டப்பட வேண்டியதாகும். ஆனால் பாடசாலை பரிசளிப்பு விழாக்கள் மாணவர்களின் வாசிக்கும் திறனை வளர்ப்பதாக அமையவேண்டும். பாடங்களுக்கு வழங்கப்படும் பரிசுகள், பரிசு பெறும் மாணவர்களை வாசிப்பில் ஈடுபடுத்துவதற்காக வழங்கப் படுதல் வேண்டும். வீடுகளில் நூலகங்களை உருவாக்கும் பண்பாட்டினைப் பாடசாலைகள் ஊக்குவிக்க வேண்டும்.

வெற்றிக்கிண்ணங்கள் வீட்டை அலங்கரிக்க உதவுகின்றன. நூல்கள் மனதைப் பக்குவப்படுத்த உதவுவன. நாங்கள் படிக்கின்ற காலத்தில் பரிசளிப்பு வைபவங்களில் வழங்கப்பட்ட நூல்கள் எனக்கு வழிகாட்டியாக உதவின. அவற்றை வாசித்ததால் நான் வாழ்க்கையில் பெற்ற அனுபவங்கள் அனந்தம்.

இன்று மாணவரிடம் வாசிக்கும் ஆற்றல் குறைந்து வருவதற்கு ஆசிரியர்களும், பெற்றோரும் முழுப்பொறுப்பையும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர் துஸ்பிரயோகத்துக்கான காரணங்களும் சரியாக நமது சிறுவர்கள் வழக்கப் பெறாமைதான் என்பதைப் புரிந்து கொண்டால் நமது சமூகம் சொர்க்கமாகும்.

விளையாட்டு விழாக்களிலும். பரிசளிப்பு விழாக்களிலும் எவ்வாறான பரிசுகளை வழங்க வேண்டும் என்று பாடசாலைகளுக்கு அறிவுறுத்தல்களைக் கல்வியமைச்சு வழங்க வேண்டும். இவ்வாறான வழிவகைகளைக் கையாண்டால் நமது பாடசாலைச் சமூகம் விழித்துக் கொள்ளும்.

சிறுவர் இலக்கியம் என்றால் என்ன? அவற்றைப் படித்து பிள்ளைகளுக்கு எவ்வாறு உதவலாம் என்பதையும் ஆசிரியர்களும், பெற்றோர்களும் அறியவேண்டியது அவசியமாகிறது. மேற்குலக நாடுகளில் பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு வாசிக்கும் பழக்கத்தை இரண்டு, மூன்று வயதினிலேயே தொடங்கி உற்சாகப் படுத்துகிறார்கள். வீட்டிலும், பயணங்களை மேற்கொள்ளும்போதும் பெரியவர்களின் கைகளில் ஏதாவது ஒருநூல் இருப்பதை அவதானிக்கலாம். நமது பிள்ளைகளையும் வாசிக்கும் கலாசாரத்தில் ஈடுபடுத்துவோம்.

இதில் அடங்கியுள்ள கதைகளை நீங்களும் வாசியுங்கள். அவற்றை உங்கள் பிள்ளைகளையும் வாசிக்கத் தூண்டுங்கள்.

கேணிப்பித்தன் ச.அருளானந்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பூனைக் குட்டியும் தேனியும்

அது நாவல் மரங்கள் நிறைந்த கிராமம். அதனால் 'நாவற்சோலை' என்ற பெயர்வந்தது. நாவற்சோலைக் கிராமத்தில் வெண்நிலா முன்பள்ளி இருந்தது. முன்பள்ளியின் சூழல் மிகவும் அழகானது. வண்ணப்பூக்கள் நிறைந்த பூந்தோட்டம். அங்கே நித்தம் வரும் வண்ணத்துப் பூச்சிகள். சிறு பறவைக் கூட்டங்கள். தேனீக்கள் எராளம்.





அவை பூக்கள் என நினைத்து முன்பள்ளிப் பிள்ளைகளைச் சுற்றிச் சுற்றிப் பறக்கும். அவை பாட்டம் பாட்டமாக பறந்து திரியும். பிள்ளைகள் அவற்றோடு விளையாடுவார்கள்.




அவர்களோடு ஒரு பூனைக்குட்டியும் சேர்ந்து கொள்ளும். பிள்ளைகளுடன் விளையாடும். பிள்ளைகளின் முன்னால் வாங்கில் ஏறி இருக்கும். பென்சிலை வாயினால் கௌவும். பிள்ளைகள் விளையாடும்போது நடுவில் பாய்ந்து ஓடும். தனியே இருக்கும் பிள்ளைகளின் முன்பாய்ந்து பயம் காட்டும். பிள்ளைகள் பயந்து அலறுவார்கள். சத்தம் வந்ததும் பாய்ந்து ஓடிவிடும். பிள்ளைகளுக்கு பூனைக்குட்டியின் செயற்பாடுகள் இடையூறாக இருந்தன. எனினும் அந்தப் பூனைக்குட்டியைப் பிள்ளைகள் விரும்பினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருநாள் பிள்ளைகள் வெண்நிலா முன்பள்ளிப் நிபூங்காவில் விளையாடிக் கொண்டிருந்தார்கள். பூனைக் குட்டியும் விளையாடுவதற்குச் சென்றது. ஆசிரியர் பக்கம் நின்றது. வழமைபோல் வண்ணத்துப் பூச்சிகள் பறந்து திரிந்தன. பிள்ளைகள் அவற்றைப் பிடிக்கப் போனார்கள்.




அவை பறந்து பறந்து அவர்களை ஏமாற்றின. ஒரு சிறுமி வண்ணத்துப் பூச்சியைப் பிடித்தாள். அதன் அழகில் மயங்கினாள். "ரீச்சர் இந்த வண்ணத்துப் பூச்சி எவ்வளவு அழகு? பார்த்தீர்களா"? என்றாள். "அழகுதான். இதனை என்ன செய்யப் போறீங்க"? ஆசிரியர் கேட்டார்.

"பாவம் ரீச்சர். அதற்குப் பசியாக இருக்கும். பூவில் உள்ள தேனைக் குடிக்கட்டும். விடப்போகிறேன்". என்று கூறினாள். அப்படியே ஒரு பூவில் விட்டாள். அது பறந்துபோனது. அந்தச் சிறுமியை ஆசிரியர் பாராட்டினார்.

'உயிர்களிடத்தில் அன்பு வேண்டும்'

என்ற பாரதியின் பாடலை ஆசிரியர் பாடிக்காட்டினார். பிள்ளைகளும் சேர்ந்து பாடினார்கள்.

அச்செயல் பிள்ளைகளுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. கலகலத்துச் சிரித்து மகிழ்ந்தார்கள். ஆசிரியர் பார்த்து மகிழ்ந்தார். பூனைக்குட்டிக்குச் சந்தோசம் பிறந்தது. பிள்ளைகளையும் வண்ணத்துப் பூச்சிகளையும் மாறிமாறிப் பார்த்தது. "நானும் வண்ணத்துப் பூச்சிகளைப் பிடித்தால் என்ன"?, யோசித்தது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அடிமேல் அடிவைத்துப் பதுங்கியது. வண்ணத்துப் பூச்சிகள் பிடிபடவில்லை. பலமுறை முயற்சித்தது. சற்று அப்பால் சென்றது.

பூவை நாடித் தேனீக்கள் வந்தன. பிள்ளைகளைச் சுற்றிவிட்டுப் பூக்களை நாடிச் சென்றன. பூக்களில் மொய்த்துத் தேனை அருந்தின. ஒரு பெரிய தேனி பறந்து வந்தது. பூவில் அமர்ந்து தேனை உண்டது. அதனைப் பூனை கண்டுவிட்டது. அதனை நோக்கிச் சென்றது.



"ஏய் பூனைக்குட்டியே!. அங்கு போகாதே. அது தேனி. கொட்டும் ". சத்தமிட்டார்கள். பூனைக்குட்டி அலட்டிக் கொள்ளவில்லை. தேனியைப் பிடிக்கச் சென்றது. தேனி வேறு பூவில் தாவியது. பூனை விட்டபாடில்லை. "பூனையே விலகி ஓடு. பசிக்கிறது. தேனைக் குடிக்கவிடு". தேனி சத்தமிட்டது.


ஆனால் பூனைக்கு விளங்கவில்லை. தன்னைக் கண்டு தேனி பயந்து ஓடுவதாக எண்ணியது. தேனியைப் பின்தொடர்ந்து சென்றது. தேனிக்குப் பொறுக்க முடியவில்லை. வேறொரு பூவை நாடிப் பறந்தது. பூனை விடுவதாக இல்லை. தேனியைப் பின் தொடர்ந்து பாய்ந்து பிடிக்க முனைந்தது. தேனி பிடிபடாமல் பூனையின் முகத்தில் தனது கொடுக்கால் கொட்டியது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூனைக்குத் தாங்கமுடியாத வலி ஏற்பட்டது. "மியாவ்...மியாவ்" என்று சத்தமிட்டவாறு சுருண்டு அழுதது. பிள்ளைகள் முதலில் சந்தோசப் பட்டார்கள். ஆனால் பூனை வலியால் துடித்ததைப் பார்த்தார்கள். அவர்களது மனங்களில் இரக்கம் ஏற்பட்டது. அதற்காக வருந்தினார்கள்.



"ஏய்! பூனைக் குட்டியே! நாங்கள் போகவேண்டாம் என்று சொன்னோம்தானே.? நீ கேட்காமல் போனாய். வாங்கிக் கட்டிக் கொண்டாய். இப்போது அழுகிறாய். அழாதே. வலி மாறிவிடும். இனியாவது ஒழுங்காக இரு". பிள்ளைகள் பூனைக்கு அறிவுரை கூறினார்கள். ஆசிரியர் பிள்ளைகளைப் பார்த்தார். ஒரு மாணவி பக்கத்து வீட்டுக்கு ஓடினாள். கையில் புளியைக் கொண்டு வந்தாள். பூனையின் பக்கம் சென்றாள். தேனி கொட்டிய இடத்தில் தேய்த்துப் பூசிவிட்டாள். சற்று நேரத்தால் பூனைக் குட்டி அமைதியாக இருந்தது. வெண்நிலா முன்பள்ளியின் மூலையில் ஒதுங்கிக் கொண்டது. ஆசிரியர் பிள்ளைகளின் இரக்க குணத்தைக் கண்டு பிரமித்தார். நல்ல பிள்ளைகள் என்று பாராட்டினார். பூனை பதுங்கிக் கொண்டு பார்த்தது. இப்போது பிள்ளைகள் சொல்வதைப் பூனை கேட்டு நடக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாதவனும் மான் குட்டியும்

மாகாமம் குளமும் வயலும் சூழ்ந்த அழகான ஊர். குளத்துக்கு அக்கரையில் காடு பரவிக் கிடந்தது. ஊர்மனைப் பக்கம் வயலும் தோட்டங்களும் விரவிக் கிடந்தன. காட்டில் பலவகையான விலங்குகளும் வாழ்ந்தன.




ஒரு அழகிய மான் தனது குட்டியுடன் வாழ்ந்தது. மாலை நேரத்தில் விலங்குகள் குளத்தில் தண்ணீர் குடிப்பதற்காக கூடும். மான் குட்டிகள் சேர்ந்து துள்ளிப் பாய்ந்து சவாரி போகும். "தூரத்துக்குப் போகவேண்டாம்" என்று தாய் மான்கள் எச்சரிக்கும். குட்டிகள் அதனைக் கேட்பதில்லை. ஓடி விளையாடிவிட்டுத் தாய் மான்களிடம் வந்து விடும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக் குளத்தில் குளிப்பதற்குச் சிறுவர்கள் வருவார்கள். அவர்கள் நீச்சலடித்து விளையாடுவார்கள். அவர்கள் நீச்சலடிப்பதை மான் குட்டிகள் பார்த்து மகிழும். சிறுவர்கள் மான் குட்டிகளுக்கு தளிர்களை உடைத்துக் கொடுப்பார்கள். அவை சந்தோசமாக உண்ணும். இது பலநாட்கள் தொடர்ந்தன. சிறுவர்களின் நீச்சலைப் பார்ப்பதற்காகவே அவை வரும். அத்துடன் ருசியான தளிர்களை உண்பதற்காகவும் வரும். சிறுவர்கள் கிட்டப் போனால் அவை விலகி ஓடும். ஆனால் எட்டிநின்று பார்க்கும்.



ஒருநாள் குட்டிகள் ஓடி ஒளிந்து விளையாடின. அந்த வழியால் வந்த நரி சின்னக் குட்டியைக் கண்டு கொண்டது. அந்தக் குட்டியை மடக்கிப் பிடிக்கப் பதுங்கியது. பற்றையருகில் மறைந்திருந்தது. குளத்தில் குளித்துக் கொண்டிருந்த மாதவன் அதனைக் கண்டு கொண்டான். அவன் நரிக்குத் தெரியாமல் தவழ்ந்து வந்தான். மான்குட்டி ஓடி வந்தது. நரி அதன்மேல் பாய்ந்தது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மான்குட்டி எதிர்பார்க்க வில்லை. அது நடுங்கிற்று. மான்குட்டிக்கு மேல் பாய்ந்த நரி சுருண்டு விழுந்தது. மாதவனின் கையில் இருந்த தடி நரியின் முதுகில் விளையாடியது. அடிவாங்கிய நரி ஊளையிட்டவாறு ஓடிமறைந்தது.



மாதவன் கைகளுக்குள் மான்குட்டி தஞ்சமானது. அதனை அணைத்தெடுத்தபடி நடந்தான். மான்குட்டி பயந்து நடுங்கியது.

“ஏய்! பயப்படாதே. உன்னை நரியிடமிருந்து பாதுகாத்து விட்டேன். உன்னை உன் அம்மாவிடம் ஒப்படைப்பேன். இந்தா! இதனைச் சாப்பிடு”. என்று தளிர்களை உடைத்துக் கொடுத்தான்.

மான் குட்டி பயந்து சாப்பிடாதிருந்தது. அதனைத் தடவி விட்டான். அதற்கு முத்தம் கொடுத்தான். தனது அன்பையெல்லாம் பொழிந்தான்.
“அழகான மான்குட்டியே! நான் வராதிருந்தால் அந்த நரி உன்னைக் கொன்று சாப்பிட்டிருக்கும். நான் வந்ததால் தப்பினாய். இப்போது அடம்பிடிக்காது சாப்பிடு'. என்றான்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மான் குட்டி அவனைப் பார்த்தது. அதன் கண்களில் இருந்து கண்ணீர் கசிந்தது.

"சரி அழாதே. உன்னை உன் அம்மாவுடன் சேர்த்து விடுகிறேன்". கூறிக்கொண்டே மான்குட்டியைத் தூக்கிக் கொண்டு காட்டுப் பக்கம் நடந்தான். அவனது கைகளில் தளிர்க்கட்டும் இருந்தது.




தளிர் கட்டை மானுக்குக் கிட்டப் போட்டான். குட்டியைக் கீழே விட்டான். குட்டியைக் கண்ட தாய்மான் வெருண்டு பார்த்தது. மான்கள் கூட்டமாக நின்றன. மாதவன் குட்டியைத் தாயின் பக்கம் விட்டான். தளிர்க்கட்டையும் போட்டான். அவை பழகிய மான்கள் போல் தளிரை உண்டன. மாதவன் அவற்றைப் பார்த்தவாறு வீடு திரும்பினான். ஒரு உயிரைக் காப்பாற்றிய பெருமையுடன் வீடு சேர்ந்தான்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உன்னால் நான் உயர்ந்தேன்

மானும் மயிலும் நிறைந்த தாமரைக் குளம் இருந்தது. அக்குளம் வில் வடிவில் அமைந்திருந்தது. அதனால் அந்தக் குளம் இருந்த இடத்தைத் தாமரைவில் என்றழைத்தார்கள். அந்தக் குளத்தில் தாமரை மலர்கள் விரிந்து காற்றில் ஆடும். எந்த நேரமும் வண்டுகளின் ரீங்காரம் கேட்கும்.



தாமரைவில் முன்பள்ளிப் பாடசாலையில் கலைவிழா நடந்து கொண்டிருந்தது. பிள்ளைகள் விதம்விதமாக நிகழ்ச்சிகளை நடத்திக் கொண்டிருந்தார்கள். வண்ணத்துப் பூச்சிகளாக வலம் வந்தார்கள்.




சுதா எல்லாவற்றையும் பார்த்தபடி இருந்தாள். அவளுக்கும் ஆடவேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போலிருந்தது. ஆனால் அவளுக்குச் சந்தர்ப்பம் தரப்படவில்லை. ஒருநாளைக்கு நானும் மயில்போல் ஆடுவேன். கனவு காணத் தொடங்கினாள். வீட்டில் தனது தாயாரின் சேலையைச் சுற்றிக் கொண்டு ஆடுவாள். அம்மா பார்த்துச் சிரித்துக் கொள்ளுவார். யாரும் இல்லாத நேரத்தில் ஒரே ஆட்டந்தான். பாடசாலை விட்டதும் அப்பாவுக்கான உணவை அம்மா கொடுத்து விடுவார். சுதா தனது தம்பி சுகந்தனுடன் வயலுக்குச் செல்வாள். அவர்களது வயல் இரண்டு கிலோமீற்றர் தொலைவில் இருந்தது. வயலுடன் தோட்டமும் இருந்தது. அப்பா காலையில் வயலுக்குச் செல்வார். பகல்முழுவதும் வயலில் வேலை செய்வார்.



வயல் அழகாக இருந்தது. வயல் அமைந்த சூழல் அவளுக்கு ரசனையை ஊட்டியது. அப்பாவை அழைத்தவாறு சென்றார்கள். அப்பா பிள்ளைகளைக் கண்டதும் மகிழ்ந்தார். உணவைப் பெற்றுப் பிசைந்து பிள்ளைகளுக்கும் ஊட்டித் தானும் உண்டார்.

அப்பா சற்று ஓய்வெடுத்தார். சுதாவும் தம்பியும் வயலைச் சுற்றி வந்தார்கள். வரம்பில் நடப்பது வேடிக்கையானது. சுதாவின் மனதில் பிள்ளைகள் ஆடிய நடனம் நிறைந்திருந்தது. வரம்பிலும் ஆடிக்கொண்டே நடந்தாள். வயலில் அவர்களது காவலுக்கான குடிசை இருந்தது. அதற்குள் வேண்டிய பொருட்கள் இருக்கும். பொழுது சாய்ந்து கொண்டிருந்தது. குடிசையினுள் புகுந்து அப்பாவுக்குத் தேனீர் தயாரித்தாள்.


அப்பாவை அழைத்தார்கள். அவரும் வந்தார். மூவரும் தேநீர் அருந்தினார்கள். குடித்து முடிந்ததும் வீட்டுக்குப் போகும்படி அப்பா வற்புறுத்தினார்.

சுதாவும் சுகந்தனும் வீடு நோக்கி நடந்தார்கள். வானில் கருமேகக் கூட்டம் கருக்கொண்டது. சூரிய ஒளியை மேகத்திரை மூடியது. காற்றுச் சில்லிட்டு வீசியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அக்கா அங்கே பார்!" சுகந்தன் கையை நீட்டியபடி நின்றான். அவன் கை நீட்டிய பக்கம் சுதா பார்த்தாள். அப்படியே நின்று விட்டாள். கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.



மயில் தனது தோகையை விரித்து ஆடிக்கொண்டிருந்தது. அதன் முன்னால் ஒரு குஞ்சுமயில் பார்த்து ஆடிக் கொண்டிருந்தது. அதற்கும் தோகை வளர்ந்திருந்தது. அதன் கால்கள் முன்னும் பின்னும் அசைந்தன. வளைந்து தோகையை விரித்து ஆடியது. குஞ்சு ஆடுவதை நன்றாகப் பார்த்தாள். மயிலைப்போலவே தானும் ஆடிப்பார்த்தாள். தனது கால்களை முன்னும் பின்னும், பக்கவாட்டிலும் வைத்து வளைந்து ஆடினாள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அக்கா நல்லாக இருக்கிறது. நீயும் அடுத்த கலைவிழாவில் ஆடவேண்டும்" என்று உற்சாகப் படுத்தினான்.

பாடசாலையில் பிள்ளைகள் ஆடும்போது சுதாவும் பார்த்துக் கொண்டிருப்பாள். இடைவேளையின் போது அவர்களைப் போல் ஆடிப்பார்ப்பாள். ஆட்டத்துக்குரிய உடைகள் அவளிடம் இல்லை. அதனால் நடனம் பழகுவதற்குக் கூச்சமாக இருந்தது. நடன ஆசிரியர் மாலா அவளது ஆர்வத்தைக் கண்டு கொண்டாள். அவர் சுதாவைச் சேர்த்து நடனம் பழக்கினார். சுதாவுக்குச் சந்தோசம்.
பாடசாலையில் கலைவிழாவுக்கான ஏற்பாடு தொடங்கியது. ஒவ்வொருவருக்கும் அவர்களுக்கு ஏற்ற நிகழ்ச்சிகளைப் பழக்கினார்கள். சுதாவுக்கும் சிறிதொரு நிகழ்ச்சி கொடுபட்டது.

கலகலப்பாக விழாத் தொடங்கும் நேரம் வந்தது. பிரதம விருந்தினர் வரும் நேரம் அண்மித்துவிட்டது. வரவேற்பு நடனத்தில் பங்கேற்கும் மாணவி வரவில்லை. அப்பொழுதுதான் அந்தப் பிள்ளைக்குச் சுகமில்லை என்ற செய்தி கிடைத்தது.

அதிபர் கலவரமடைந்தார். ஆனால் நடன ஆசிரியருக்குத் தைரியம் பிறந்தது. "மடம் கவலைப்படாதீர்கள். வரவேற்பு நடனத்துக்கு ஆள் தயார். நமது சுதா இருக்கிறாள். அவள் மயில் நடனத்தை நன்றாகப் பயின்றிருக்கிறாள். அவளுக்குரிய உடைகளைக் கொடுத்து ஆயத்தப்படுத்தி விட்டேன். அவளது கைகளில் சிறிய விளக்கை ஏந்தும்படி செய்வோம். பூக்களை ஒரு தட்டில் வைப்போம் முறைப்படி என்ன செய்ய வேண்டுமோ அதனைச் சொல்லிக் கொடுத்துள்ளேன். அவளது ஆட்டத்தைப் பாருங்கள்". ஆசிரியர் விளக்கினார்.

அதிபரின் முகத்தில் நம்பிக்கை இல்லை. பிரதம விருந்தினர் வந்து மங்கல விளக்கை ஏற்றினார். "செல்வி.சுதாவின் வரவேற்பு நடனம் இடம்பெறும். என்று அறிவிக்கப் பட்டது. நடன ஆசிரியர் சொல்லிக் கொடுத்ததைவிடவும், பாடலுக்கு ஏற்றவாறு தாளந்தப்பாது ஆடினாள்.

"இந்த நடனத்தை இந்தச் சின்னஞ்சிறு பிள்ளை எங்கே கற்றாள்.? அற்புதமாக இருந்தது".
பிரதம விருந்தினர் பாராட்டினார். அதிபரின் உச்சி குளிர்ந்தது. அவர் இதனை எதிர்பார்க்கவில்லை. பார்வையாளர்கள் பிரமித்து நின்றனர். சகமாணவியர் பாராட்டினார்கள். தனது தாய் தந்தையரை நினைத்துக் கொண்டாள். சுதாவின் அம்மா ஓடோடி வந்து மகளைக் கட்டியணைத்து உச்சி மோந்தார்.


"எப்படி நடனத்தைக் கற்றுக் கொண்டாய்"? அதிபர் வினவினார்.
"அப்பா வயலில் வேலை செய்வார். நான் தம்பியுடன் வயலுக்குச் செல்வேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டுக்கு வரும் வழியில் அந்த மயிலைக் காண்பேன். தம்பி அதனைக் காட்டியபடியினால் மயில் ஆடுவதைப் பார்த்தேன். அதனைப் பின்பற்றி ஆடிப்பழகினேன். எனக்கு ஆர்வம் உண்டானது. மாலா ரீச்சரிடம் கூறினேன். மாலா ரீச்சர் எனக்குப் பழக்கினார்". சுதா மனதில் உள்ளதைக் கூறினாள்.

சுதா அந்த மயிலை நினைந்து கொண்டாள். அவளது உள்ளம் எல்லாம் அந்த மயில் நிறைந்திருந்தது. அதற்கு மனதார நன்றிகூறி வாழ்த்தினாள்.



"மயிலே! உன்னால் அன்றோ நான் உயர்ந்தேன். உன்னைப் பார்த்து ஆடியதால் எனக்குப் புகழ் வந்தது. உண்மையில் நீதான் எனது குரு. உனக்கு எனது மனமார்ந்த நன்றிகள்". அந்தச் சின்ன உள்ளம் விரிந்து கொண்டது. மயிலை நினைந்து அவளது கண்கள் பனித்தன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொக்கரக்கோ சேவல்

மயில்வாகனம் பெரிய பண்ணையார். அவரது பண்ணை சுங்கான்குழியில் இருந்தது. அவர் தனது பண்ணையில் கோழிகளை வளர்த்தார். ஒன்றாக வளர்த்தால் இடநெருக்கடி ஏற்படும். அதனால் அவற்றை இரண்டாகப் பிரித்து வெவ்வேறாக்கி வளரவிட்டார். கோழிகள் சந்தோசமாக வளர்ந்தன. ஒவ்வொரு பிரிவுக்கும் ஒரு சேவல் தலைவனாக இருந்தது. இரண்டும் ஒற்றுமையாகவே



இருந்தன.

கோழிகளுக்கு ஆபத்து என்றால் சேவல்கள் இரண்டும் உதவிக்கு ஓடும். இரண்டும் சண்டைச் சேவல்கள். வேறு சேவல்கள் பண்ணையாரின் பண்ணைக்குள் வரமுடியாது. வந்தால் இரண்டும் சேர்ந்து சண்டையிட்டுத் துரத்திவிடும். கொக்கரக்கோ என்று வெற்றியைப் பறைசாற்றும்



ஒருநாள் பண்ணையார் ஒரு பயணம் சென்றார். அச்சமயம் வேறொரு சேவல் பண்ணைக்குள் நுழைந்து விட்டது. பெரிய எடுப்பாகக் கூவியது. அதனைக் கோழிகள் கண்டதும் சத்தமிட்டன. நமது பண்ணைக்குள் இச்சேவல் புகுந்து அட்டகாசம் செய்வதா? கோழிகள் கொக்கரித்தன.



பண்ணைச் சேவல்கள் கண்டு கொண்டன. சிறகடித்துக் கொக்கரக்கோ என்று கூவின. ஒரு சேவல் பாய்ந்து சென்று மோதியது. பலமாகச் சண்டையிட்டது.


வெளியில் இருந்து வந்த சேவல் பலம்கொண்டது. ஒரு சேவலால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாதிருந்ததை மறுபுறம் நின்ற சேவல் கண்டுகொண்டது. அச்சேவலும் பாய்ந்து வந்தது. கண்டை நீடித்தது. இரண்டும் சேர்ந்து தாக்கின. வெளியில் இருந்து வந்த சேவல், இரண்டோடும் தாக்குப் பிடிக்க முடியாததை உணர்ந்து கொண்டது. சண்டையை நிறுத்திவிட்டு வந்தமாதிரியே ஓடியது.

இவைகளின் ஒற்றுமையைக் குலைப்பதற்கு அந்தச் சேவல் திட்டமிட்டது. பண்ணையார் இல்லாத நேரம் பார்த்துப் பண்ணைக்குள் மீண்டும் நுழைந்தது.



ஒருமுறை சுற்றிப் பார்த்தது. மெதுவாகப் பாணிச் சேவலிடம் சென்றது. "நான் நண்பனாக இருக்கவே விரும்புகிறேன். என்னையும் உங்களுடன் சேர்த்துக் கொண்டால் என்ன"? என்று கேட்டது.





"அதெல்லாம் முடியாது. எங்கள் பண்ணையார் என்னை அடித்துத் துரத்திவிடுவார். நீ போய்விடு". என்றது. ஆனால் அது போவதாக இல்லை.
" நீ உதவப் போகிறாயா? இல்லையா"? கேட்டது. "என்னால் முடியாது". என்று சேவல் கூறியது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உன்னை ஒரு கைபார்க்கிறேன்" கூறியவாறே மற்றச் சேவலிடம் சென்றது.

"இந்தச் சேவல் ஏன் இங்கு வருகிறது. அப்பாவியாக வருகிறது. சண்டைக்கு வருவதாக இல்லை". மறுபுறத்தில் நின்ற சேவல் அதிசயமாகப் பார்த்தது. அதற்கு முன்னால் போய் நின்றது.

"நான் உங்களுடன் சேர்ந்து சமாதானமாக வாழவே வந்திருக்கிறேன். என்னையும் உங்களோடு சேர்த்துக் கொள்ளுங்கள்". என்று கூறியது.





சேவலுக்குச் சந்தேகம் வந்தது. "உனது உள்நோக்கம் எனக்குத் தெரிகிறது. உனது திட்டம் நிறைவேறாது. எங்கள் பண்ணையார் வருவதற்கு முன் ஒடிவிடு". என்றது. எனினும் அந்தச்சேவல் கோழிகளின் கூட்டினுள் நுழைய முற்பட்டது. வெளியிலிருந்து வந்த சேவலுக்கு வழி தெரியவில்லை.

"உங்களை ஒருகை பார்க்கத்தான் வந்தேன். பழிக்குப்பழி வாங்கியே தீருவேன். தனித்தனியாகச் சண்டையிட்டுத் துரத்துவேன். அதுவரை ஓயமாட்டேன்". என்றது. கோழிகளின் கூட்டைச் சுற்றிச்சுற்றி வந்தது. கோழிகள் கொக்கரித்தன.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானில் பெரிய வல்லூறு வட்டமிட்டுக் கொண்டிருந்தது. வெளியில் ஒரு சேவல் நிற்பதைக் கண்டு கொண்டது. "இன்றைக்கு நல்லதொரு உணவு கிடைக்கப் போகிறது. வேட்டையாடலாம்". மனதில் எண்ணியவாறு வானில் வட்டமடித்துச் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்தது.



வானில் வல்லூறு பறப்பதைக் கூட்டினுள் உள்ள சேவல் கண்டு கொண்டது. "ஏய் மடச்சேவலே நீ வீணே வல்லூறுக்கு இரையாகப் போகிறாய். ஓடிவிடு." என்று சத்தமிட்டது.



"உங்களுக்குப் பயந்து ஓடுவதா"? கொக்கரித்துக் கூவியது. இரண்டு சேவல்களுக்கும் ஒரு சவாலாக இருந்தது. அந்தோ பரிதாபம். வல்லூறு ஒரே வீச்சாகக் கீழே இறங்கியது. ஒரே இறாஞ்சலாக இறாஞ்சியது.

அதன் கால்களில் சேவலின் உடல் தொங்கியது. கூட்டிலிருந்த சேவல்கள் கண்மூடித் திறப்பதற்குள் வெளியில் வந்தன. சேவலின் கால்கள் வெளியில் தெரிந்தன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஒரு சேவல் உயரப்பறந்தது. அதன் கால்களுடன் தனது கால்களைக் கொழுவிக் கொண்டது. பாரத்தினால் வல்லூறால் உயரப் பறக்கமுடியவில்லை. அது கீழ்நோக்கியவாறு இழுபட்டு வந்தது. காத்திருந்த மற்றச் சேவல் வல்லூறைத் தாக்கியது. வல்லூற்றால் தாக்குப் பிடிக்க முடியவில்லை. தப்பினால் போதும் என்றெண்ணியது. தனது பிடியை விட்டது.

இப்போது சேவல் இரண்டும் விடுபட்டுச் சிறகை விரித்தன. காற்றில் பறந்து நிலத்தையடைந்தன. மூன்று சேவல்களும் பழையபடி வந்து சேர்ந்து விட்டன. "நான் உங்களைப் பிரித்துப் பழிவாங்க வந்தேன். ஆனால் நீங்கள் எனது உயிரைக் காப்பாற்றி விட்டீர்கள். உங்களின் மனவளத்தைக் கண்டு பெருமைப் படுகிறேன்". என்று வெளியிலிருந்து வந்த சேவல் கூறியது.

"ஆபத்தில் உதவுபவர்கள்தான் நண்பர்கள். உனக்கு ஆபத்து என்று தெரிந்தபின்னும் பார்த்துக் கொண்டிருப்பது தர்மமல்ல". சேவல்கள் கூறின. "நாம் தொடர்ந்து நண்பர்களாக இருப்போம். நான் எனது இடத்துக்குப்







போகிறேன். சந்தோசமாக வாழுங்கள். நான் சென்று வருகிறேன். கொக்கரக்கோ" என்று கூவியது.". இரண்டு சேவல்களும் பதிலுக்குக் கொக்கரக்கோ என்று கூவின. சேவல் விடைபெற்றுச் சென்றது. அச்சேவல் செல்வதையே பார்த்துக் கொண்டு கோழிகள் நின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாபம் நீங்கிய தேவதை

மாகாமம் பழம்பெரும் இராசதானி. இராசராச சோழன் ஆட்சியின்போது பேரும் புகழும் பெற்றிருந்தது. மாகாமத்தில் ஒரு குளம் உள்ளது. தண்ணீர் நிறைந்து அலைமோதும். தாமரைப் பூக்கள் காற்றில ஆடுவதே தனியழகாகும். குளத்துக்கு கிழக்குப் புறமாக வயற்பரப்புப் பரந்து கிடக்கிறது. வேளாண்மையுடன் உபஉணவுப் பொருட்களும் விளைந்தன.

மாரி காலத்தில் சேனைப் பயிரோடு நெற்செய்கையிலும் மக்கள் ஈடுபட்டார்கள். சேனைப்பயிர் செய்வதற்காகப் பலர் குடியேறி வாழ்ந்தார்கள். அவர்களது குடியிருப்பு வெகு தூரத்தில் இருந்தது. வேலனும் அங்கு விவசாயத்தில் ஈடுபட்டான். அவனது வயலில் வேளாண்மை செழித்து வளர்ந்து வந்தது. சேனையில் சோளம் குலைகளைத் தள்ளிக் காற்றில் ஆடியது.



வேலன் அதனைக் கண்டு மகிழ்ந்திருந்தான். பகலில் உணவுக்காக வீட்டுக்குப் போவான். மனைவி உணவினைக் கொடுப்பாள். உண்டதும் இரவுக்காகக் கட்டுச் சோற்றை எடுத்துக் கொண்டு போவான். அன்றும் வழமைபோல் கட்டுச் சோற்றை எடுத்துக் கொண்டு சேனைக்குச் சென்றான். வழமையாக சோற்றினை வைக்கும் இடத்தில் வைத்தான். இரவில் காட்டு விலங்குள் பயிரை உண்பதற்காக வரும். அதற்காகச் சுடுவானில் தீயை மூட்டிக் காவல் இருப்பான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இது ஒவ்வொரு நாளும் நடை பெறும் செயலாகும். வேலையை முடித்துவிட்டு உடலைக் கழுவினான். உண்பதற்காக உணவினை எடுக்கச் சென்றான். ஆனால் உணவினைக் காணவில்லை.

விளக்கைக் கையில் ஏந்தித் தேடினான். "ஏய் விளக்கைக் காட்டாதே. விளக்கை அணைத்துவிடு. சொன்னதைச் செய்" சத்தம் வந்த பக்கம் பார்த்தான். யாரையும் காணவில்லை. பயத்தில் விளக்கை அணைத்துவிட்டான். "என்ன தேடுகிறாய்.? உணவைத்தானே? அதனை நான் எடுத்து உண்டுவிட்டேன். பேசாமல் போய் படுத்துக் கொள். காவலை நான் பார்த்துக் கொள்கிறேன்". யாரோ சொல்வது மட்டும் இருளில் கேட்டது. அவனது அந்தச் சத்தத்துக்குரிய உருவத்தைக் காணமுடிய வில்லை.

அவனைப் பயம் கௌவிக்கொண்டது. உடல் வெயர்த்தது. விளக்கை அணைத்ததால் எங்கும் இருளாய் இருந்தது. அப்படியே இருந்து விட்டான். பசியெடுத்தது. "என்ன பசிக்கிறதா? சுடுவானில் நெருப்பு இருக்கிறது. சோளக்கதிரை சுட்டுச் சாப்பிடு. எனக்கும் சுட்டு எடுத்து வா". சத்தம் வந்தது.

வேலன் சொன்னபடியே சென்றான். சோளக்கதிரை முறித்தெடுத்தான். சிலவற்றை நெருப்பில் சுட்டெடுத்தான். அதன் வாசனை மூக்கைத் துளைத்தது. சோளக்கதிர்களைச் சாப்பிட்டான். சிலவற்றை எடுத்துக் கொண்டு தனது குடிசைக்கு நடந்தான். "வாசனை நல்லாயிருக்கு. இப்படித் தா". சத்தம் வந்த பக்கம் சுட்ட சோளக்கதிரை நீட்டினான்.

"இந்தக் கையில் சோளக்கதிரை மட்டும் வை." சத்தம் ஒலித்தது. இருளில் கையொன்று நீண்டு வந்தது.

"எனக்கு ஒன்றுந்தெரியவில்லை. சிறிதாய் வெளிச்சம் இருந்தால் விழாதவாறு கையில் வைக்கமுடியும்". என்றான்.

"வெளிச்சத்தைக் காட்டாதே. எனக்கு வெளிச்சம் பிடிக்காது. என்னைப் பார்க்காதே. நீ பயந்துவிடுவாய்." அந்தக் கரடுமுரடான பெண்குரல் ஒலித்தது. வேலனுக்கு ஒன்றும் புரியவில்லை. கண்களைக் கூர்மையாக்கிப் பார்த்தான்.

அது மனிதர்களின் கைபோலில்லை. விரல்களின் நகங்கள் கூரிய கத்திபோல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தன. கைகளை மூடி ரோமம் நிறைந்து கருமையாக இருந்தது.

சோளக்கதிர்களை அந்தக் கையில் வைத்தான். சோளக்கதிர்கள் கிடைத்ததும் சட்டெனக் கையை எடுத்துக் கொண்டது. சோளத்தைச் சப்பிச் சாப்பிடும் சத்தம் கேட்டது. எப்படியும் அந்த உருவத்தைப் பார்த்துவிட அவனது இதயம் துடித்தது. வெளியில் வந்து பார்த்தான். இன்னும் சோளக்கதிர் கொண்டுவருகிறேன். என்று சுடுவானை நோக்கி நடந்தான். அந்த உருவம் பேசாமல் இருந்தது.

அவன் சோளக்கதிரை முறித்துச் சுட்டான். கையில் எடுத்துக்கொண்டு குடிசைக்கு வந்தான். உருவத்தின் சத்தத்தைக் கேட்கவில்லை. அரவம் ஒன்றுமில்லை. தனது கையில் இருந்த ரோச்சை அடித்தான். அவன் முன்னால் அது நின்றது. கண்கள் தீவட்டிபோல் இருந்தன. தலையைக் குனிந்தவாறு கண்களைக் கைகளால் மறைத்துக் கொண்டு
“வெளிச்சத்தை அணையடா” உருவம் பயங்கரமாக அலறியது.

சட்டென 'ரோச்' வெளிச்சத்தை அணைத்தான். வேலன் பயத்தால் நடுங்கி வீழ்ந்து விட்டான். அந்தப் பயங்கர உருவம் கோபத்தோடு அவன் பக்கத்தில் வந்தது. அவன் கிடந்த நிலையைக் கண்டு ஒதுங்கிக் கொண்டது. அவனுக்கு நினைவு வந்து எழுந்தான். அந்தப் பயங்கர உருவம் அவன் மனதைவிட்டுப் போகவில்லை.



“ஏய் எனக்கு நீ உணவு தந்தாய். உப்பிட்டவரை உள்ளளவும் நினைக்க வேண்டும். அதனால் உன்னை மன்னித்தேன். எனது உருவத்தை இதுவரை யாரும் பார்க்கவில்லை. நீ பார்த்து விட்டாய். யாரிடமாவது சொன்னாயென்றால் நீ தொலைந்தாய். உன்னைக் கடித்துக் குதறிவிடுவேன்”. அந்த உருவம் எச்சரித்தது.

“நீ காட்டிய வெளிச்சத்தால் எனது பார்வை குறைந்து விட்டது. நான் எப்படிக் குளக்கட்டுக்குப் போவேன்? எனது பார்வை சரியாகும் வரை எனக்குரிய வேலைகளை நீதான் செய்துதர வேண்டும். இந்தச் சேனையை விட்டு என்னால் வெளியில் போகமுடியாது.” கூறியவாறு சோளஞ்செடிக்குள் குந்தியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலனுக்கு அந்த உருவத்தைப் பார்க்கப் பயங்கரமாக இருந்தது. மனிதரைப்போல் தோற்றம். ஓணானைப் போல் உடலெங்கும் தோல். கைகளில் கூரிய நகம். தீவட்டிக் கண்கள். அவனுக்கு இப்போது கொஞ்சம் தைரியம் வந்தது.

“ஐயா பார்ப்பதற்குப் பயமான தோற்றமாக இருக்கிறது. ஆனால் பெண்ணின் குரலாகவும் இருக்கிறதே. அது எப்படி”? அதிசயமாகக் கேட்டான். அந்த உருவம் அவலக்குரலோடு சிணுங்கியது.

“உனக்கு இதெல்லாம் தேவையற்றது. உன் வேலையைப் பார்”. உருவம் ஒதுங்கிக் கொண்டது. வேலனுக்கு எல்லாம் கனவுபோலிருந்தது.

பறவைகள் விழித்துக் கொண்டன. கிழக்கு வெளித்துக் கொண்டு வந்தது. அந்த உருவம் சோளஞ்செடிகளுக்குள் தன்னை மறைத்துக் கொண்டது. பகலில் வெளியில் வராது என்ற நம்பிக்கை பிறந்தது. அவன் வயல் வரம்பில் நடந்தான். சோளஞ்சேனைக்குள்ளும் போய்வந்தான்.

நல்ல சோளங்கதிர்களாகப் பார்த்தான். முறித்தெடுத்துச் சுடுவானில் சுட்டெடுத்தான். வீட்டுக்குக் கொண்டு போவதற்காகச் சிலவற்றை வேறாக்கினான். பெரிய கதிர்களாகச் சிலவற்றை எடுத்து உருவம் ஒதுங்கிய இடத்தில் வைத்தான். “நல்லாக மணக்கிறதே. எனக்கா இவை”? உருவம் கேட்டது. “எனக்குப் பசிப்பதுபோல்தானே உங்களுக்கும் பசிக்கும். சாப்பிடுங்க. மத்தியானம் நான் வீட்டுக்குப் போய் நல்ல சாப்பாடு எடுத்து வருகிறேன். அதுவரை சோளம்தான் இருவருக்கும் சாப்பாடு”. கூறியவாறே தனது வேலையைக் கவனித்தான். உருவமும் சாப்பிட்டது.

பகல் வீட்டுக்குப் போனான். நடந்ததை மனைவிக்குக் கூறினான். வள்ளி புத்திசாலி. நல்ல உணவுவகைகளைச் சமைத்தெடுத்தாள். “நானும் வருகிறேன். அந்த உருவத்தை நானும் பார்க்கவேணும். நான் கேள்விப் பட்ட





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதை உண்மையாகவும் இருக்கலாம். என்னையும் கூட்டிப்போங்க'' வற்புறுத்தினாள். எல்லாவற்றையும் வண்டியில் ஏற்றினான். வண்டில் சேனைக்குச் சென்றது. மாடுகளை அவிழ்த்து நல்ல புல்வெளியில் கட்டினான். வள்ளியுடன் குடிசையை நோக்கி நடந்தான்.

''ஏய் அங்கேயே நில்''. சத்தமிட்டவாறு உருவம் சோளஞ்செடிக்குள் நின்றது. அவனுக்குத் தைரியம் வந்தது.

''இவள் எனது மனைவி. உங்களுக்காக விருந்து பரிமாற நல்ல உணவு கொண்டு வந்திருக்கிறாள்''. வேலன் அன்பாகச் சொன்னான். உருவம் அமைதியடைந்தது.

வள்ளி உணவை பக்குவமாக எடுத்து வைத்தாள். அந்த உருவத்தை சோளஞ்செடிகளுக்கு இடையால் பார்த்தாள். அவளுக்கு விளங்கிவிட்டது. சேனையின் அருகில் சிற்றாறு ஓடியது. அதில் குளித்தாள். உடையை மாற்றி வந்தாள். வாழையிலையினை வெட்டியெடுத்தாள். அதில் உணவினைப் படைத்தாள். செம்பில் தண்ணீரை எடுத்தாள். அறுகம் புல்லை அரைத்தெடுத்தாள். நீரினுள் கலந்தாள். உணவை உருவத்தின் அருகில் வைத்தாள். செம்பைக் கொடுத்தாள். ''இதிலுள்ள தண்ணீரினால் முகத்தைக் கழுவுங்கள். கொஞ்சம் தண்ணீரைக் குடித்துவிட்டுச் சாப்பிடுங்கள்''. அன்பாகக் கூறிவிட்டு நின்றாள்.

உருவம் சொன்னவாறே செய்தது. உணவினை உண்டதும் வெற்றிலையை மடித்துக் கொடுத்தாள். வெற்றிலையையும் சாப்பிட்டது. அந்த உருவத்தை பார்த்தபடியே வேலன் அதிசயித்து நின்றான். பயங்கரமான உடல் மாறிச் சிறுத்துக் கொண்டு வந்தது. சற்று நேரத்துக்கொல்லாம் அழகிய தேவதையாக மாறிவிட்டது.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலனுக்குச் சந்தோசம். அழகிய தேவதை எவ்வாறு பயங்கரமான நிலைக்கு வந்தது.?
“என்னைப் பழைய நிலைக்கு மாற்ற உன்னால் எப்படி முடிந்தது”? அந்தத் தேவதை கேட்டது.
“அது இருக்கட்டும். நீங்கள் இந்த நிலைக்கு வந்ததற்கான காரணத்தை நாங்கள் அறியலாமா”? வள்ளி முழந்தாளில் நின்றவாறே கேட்டாள்.

“ஒரு முனிவரின் சாபத்தால் பயங்கர உருவெடுத்தேன். ஒரு பெண் எப்போது உனக்கு மனமுவந்து உதவுவாளோ, அப்போது நீ பழைய உருவைப் பெறுவாய். என்று முனிவர் சாபவிமோசனமும் தந்தார். அந்தப் பெண்ணாக வள்ளி நீ வந்தாய்.

வேலா! நீ என் பசியைத் தீர்த்தாய். என்மேல் கருணை காட்டினாய். பிறரில் அன்பு காட்டினால் பொல்லாதவர்களும் திருந்துவார்கள் என்பதை நீ நிரூபித்து விட்டாய். உங்களுக்கு எந்தக் குறையும் வராது. உங்களைக் காப்பதற்கு நான் மாகாமக் குளக்கட்டில் காவலாக இருப்பேன். வள்ளி நீ உண்மையில் சாதனை படைத்து விட்டாய். என்றும் சந்தோசமாக இருங்கள்.” வாழ்த்திவிட்டு தேவதை மாகாமக் குளத்தினுள் மறைந்து விட்டாள்.

வேலனும் வள்ளியும் சந்தோசமாக மாகாமத்தில் வாழ்கிறார்கள். வெள்ளி. செவ்வாய் தினங்களில் குளக்கட்டில் விளக்கேற்றி வணங்குவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலாவில் நிலாமதி

கொட்டியாரக் குடாக்கடல் இரைந்து கொண்டிருந்தது. சில்லிட்ட காற்று வீசியது. நீலக்கடற்பரப்பில் இருந்து நிலாக் கிளம்பியது. பூரணை நிலவு செம்மஞ்சள் நிறத்தில் கோளமாகத் தகதகத்தது. அதனையே இமைவெட்டாது நிலாமதி பார்த்துக் கொண்டிருந்தாள். "சா... நிலவு எவ்வளவு அழகானது. இந்த நிலவுக்கு ஆம்ஸ்ரோங் எவ்வாறு போனார். அவர் கொடுத்து வைத்த மனிதர். எனக்கு மட்டும் சிறகிருந்தால் அந்த நிலாவைத் தொட்டு வந்துவிடுவேன்". தனக்குள் கூறிக்கொண்டாள்.



நிலாமதி ஏழைச்சிறுமி. இறால்குழி மகளிர் வித்தியாலயத்தில் ஐந்தாம் வகுப்பில் கற்றுக் கொண்டிருந்தாள். வகுப்பாசிரியர் நாமகளின் கைகளில் 'சந்திரன் கதைகள்' என்ற கதைப்புத்தகம் இருந்தது. இன்று காலையில் அப் புத்தகத்திலிருந்து நிலவினைப் பற்றிய கதையொன்றை வாசித்துக் கூறினார். அந்தக் கதையை நிலாமதி ஊன்றிக் கவனித்தாள். அதன் பிரதிபலிப்பே அவளை அவ்வாறு சிந்திக்க வைத்தது. அப்படியே நிலவினைப் பார்த்தபடி இருந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நிலாமதி பாடசாலைக்குச் சென்று கொண்டிருந்தாள். வழியில் ஒரு அனாதையாக ஒரு பாட்டி நின்றாள். "பசிக்கிறது பிள்ளை. பாட்டிக்கு ஏதும் இருந்தால் தருவாயா"? பாட்டி கேட்டாள். நிலாமதி மறுபேச்சுப் பேசவில்லை. தனது புத்தகப் பையினுள் கையை விட்டு அந்தப் பொட்டலத்தை எடுத்தாள். "பாட்டி பகல் சாப்பாடு இருக்கு. சாப்பிடுவீங்களா"? கேட்டாள்.

"ஓம் மகள்". பாட்டி பதில் சொன்னாள்.
"என்ன மகள் பகல் சாப்பாடு என்றாய். இதற்குள் ஒருதுண்டு ரொட்டிதானே இருக்கு. உனக்கு இதுபோதுமா? எனக்குத் தந்தால் நீ எதைச் சாப்பிடுவாய்? " பாட்டி கேட்டாள்.

"தண்ணியைக் குடிப்பேன். பாட்டியின் பசி தீர்ந்தால் அதுவே போதும்." நிலாமதி பதிலளித்தாள். பாட்டி ஒருதுண்டு ரொட்டியை வாயில் போட்டாள். அவ்வளவுதான் பாட்டி அங்கே இல்லை. அழகிய தேவதை நிலாமதியின்



முன்னால் நின்றாள்.

"நிலாமதி நீ நிலாவைப் பார்க்கப் போகிறாயா? வா என்னோடு. நான் வானில் பறந்து உன்னை அழைத்துப் போகிறேன்". தேவதை கூறியது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவதை தனது கையை நீட்டியது. நிலாமதி தேவதையின் கையைப் பற்றினாள். இருவரும் நீலவானில் பவனி வந்தனர்.

"அதோ சந்திர தேவதை இருக்கிறாள். அவளது கைகளில் சந்திரன் இருக்கிறது. நன்றாகப் பார். இங்கேதான் ஆம்ஸ்ரோங் தனது காலடியைப் பதித்தார். சந்திரத் தரையில் நடப்போமா? வா." கூறிக்கொண்டு சந்திரத் தரையில் காலடி வைத்தது.




நிலாமதியும் தனது காலடியை ஊன்றினாள். "பூமியில் இருந்து பார்க்கும்போது எவ்வளவு அழகாகத் தெரிகிறது. ஏன் இவ்வளவு கடினமாகச் சந்திரத் தரை உள்ளது"? நிலாமதி தேவதையிடம் கேட்டாள். "சந்திரத் தரை கடினமானதுதான். அத்துடன் தூசுப்புயல் வீசும். அங்கே பார். எங்கும் ஒரே தூசுமயமாக இருக்கிறது". தேவதை காட்டியது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எத்தனை பள்ளங்கள். உயர் குன்றுகள். இந்தக் குழிகள் எப்படி உருவாகின.? நிலாமதி தேவதையிடம் கேட்டாள்.
ஆயிரமாயிரம் விண்கற்கள் சந்திரத் தரையில் விழுந்து குழிகளை ஏற்படுத்துகின்றன. உனக்கு ஒன்று தெரியுமா"? தேவதை கேட்டது.
"என்னது"? ஆவலோடு நிலாமதி கேட்டாள்.
"சந்திரனுக்கு ஒளியில்லை."
"அப்படியா? அப்படியென்றால் ஒரு பக்கம் அதிகமாக வெப்பமாக இருக்குமே?. இங்கு பாருங்கள்". என்று கூறித் தன்போத்தலில் இருந்து தண்ணீரைச் சந்திரத் தரையில் ஊற்றினாள். தண்ணீர் உடனடியாக ஆவியாகப் போய்விட்டது.
"ஓ..அதுவா.. சூரியனின் ஒளியைப் பெற்றுத்தான் சந்திரன் ஒளர்கிறது". தேவதை விளக்கியது. "ஓ…அப்படியா? அதுதான் ஒரு பக்கம் கடும் குளிராக இருக்கிறதோ"? அதிசயமாகக் கூறினாள்.



நிலாமதியின் பார்வை வேறு பக்கம் திரும்பியது. "அங்கே பாருங்கள். அது என்ன அடையாளம்"? வாய்விட்டுக் கேட்டாள்.

"இதுதான் ஆம்ஸ்ரோங்கின் சப்பாத்தின் அடையாளம்". தேவதை பதிலிறுத்தது.

"அடையாளம் ஏன் இன்னும் அழியாமல் அப்படியே இருக்கிறது"? அதிசயத்துடன் கேட்டாள்.
சந்திரனில் வளியில்லை. காற்றும் வீசுவதில்லை. அதனால் அடையாளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் அழியாது இருக்கிறது.

"ஆம்ஸ்ரோங் இன்னும் சில தடயங்களை விட்டுவிட்டு வந்தாராமே. நாமகள் ஆசிரியர் கூறினார். அவை எங்குள்ளன"? நிலாமதி வினவினாள்.

"ஓ...அதுவா? அதோ தெரிகிறது பார்" தேவதை காட்டினாள். நிலாமதி பார்த்தாள்.



நான்கு பக்கங்களைக் கொண்ட சிறு இதழ், ராஜாளியின் இறகு, ஒரு பைபிள், விண்வெளி உடையுடனான சிறு மனிதனது உருவம் அத்துடன் "உலகத்தின் மனிதர்களாகிய நாங்கள் எல்லா மனுக்குலத்துக்கும் சமாதானம் வேண்டி ஜூலை 1969 ல் இந்த சந்திரனில் வந்து காலடி பதித்து இச்சின்னங்களைவிட்டுச் செல்கிறோம்" என எழுதிய வாசகம் கொண்ட அடையாளத்தையும், கண்டாள். நிலாமதிக்கு ஆச்சரியம்.

"ஆம்ஸ்ரோங் எப்படி சந்திரனுக்கு வந்தார்"?
"உங்கள் ஆசிரியர் நாமகள் கூறியிருப்பாரே. நினைவில்லையா"? தேவதை கேட்டது.
"ஆம்ஸ்ரோங் விண்கலத்தில் பயணித்தார் என்று ரீச்சர் சொன்னவர்தான். ஆனால் நீங்கள் என்னையும் அழைத்துக் கொண்டு விண்ணைத் தாண்டி வெறுமனே வந்தீர்களே. அது எப்படி"? நிலாமதி கேட்டாள்.

தேவதை சிரித்துக் கொண்டாள். "ஆம்ஸ்ரோங் உன்னைப் போல் ஒரு மனிதன். மனிதர் பூவுலகில் மட்டும் வாழலாம். அவர்களும் தண்ணீருக்குள் வாழமுடியாது. மீனினத்தைப் பிடித்து நிலத்தில் போட்டால் அவற்றால் வாழமுடியுமா? இவை இயற்கையின் விதிமுறைகள். நான் தேவதை. நாங்கள் எங்கும் வாழலாம். யாருடைய கண்களுக்கும் தெரியமாட்டோம். இதுவும் இயற்கையின் நியதிதான்". தேவதை விளக்கியது. கதையைத் திசை மாற்றியது.

"சரி சந்திரனை ஒரு சுற்றுச் சுற்றிவிட்டு வருவோம்.வா" கூறிக்கொண்டு நிலாமதியின் கைகளைப் பற்றிக் கொண்டு நடந்தது. நிலாமதிக்கு நடப்பதில் சந்தோசம் பிறந்தது. தன்னைப் பார்ப்பதற்கு வேடிக்கையாகவும் இருந்தது. ஒரு துள்ளுத் துள்ளினாள். காற்றில் பறப்பதுபோன்ற உணர்வு தோன்றியது. என்ன இது? ஒரு அடி வைத்தால் காற்றில் பறந்து அடுத்த அடி மெதுவாக சந்திரத் தரையில் படும். காற்றில் பறப்பதாக உணர்ந்தாள். அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சந்தோசத்தைக் கொடுத்தது.

"நிலாமதி வானத்தைப் பார். என்ன நிறமாகத் தெரிகிறது"? தேவதை கேட்டது.

"கறுப்பு நிறமாகத் தெரியுது." நிலாமதி பதிலளித்தாள். "சரியாகச் சொன்னாய். வேறென்ன சொல்ல விரும்புகிறாய்"? தேவதை கேட்டாள்.
"அதோ தெரிகிறதே நீலநிறமான சந்திரன். அது என்ன"? நிலாமதி கேட்டாள்.
"அதுதான் நீங்கள் வாழும் பூமி. உங்கள் பூமியில் முக்கால் பங்கு கடலால் சூழப்பட்டது. அதனால் அதனை நீலக்கோளம் என்பார்கள். சரி நேரம் போகிறது. வீட்டில் உன்னைத் தேடுவார்கள். வா போவோம்.". மீண்டும் நிலாமதியின் கைகளைப் பற்றி தேவதை பூமியை நோக்கி விரைந்தது.

"எனக்கொரு சந்தேகம். அதனைக் கேட்கலாமா?
"என்ன சந்தேகம்"? தேவதை கேட்டாள்.
எங்கள் வீட்டு முற்றத்தில் இருந்து நிலவைப் பார்த்தால் ஔவையார் தெரிவார். அவரையும் காணோம். முயல்குட்டியையும் காணோம். எங்கே ஔவையார் போனார்? முயல்குட்டி ஒளிந்து கொண்டதா"? நிலாமதியின் கேள்வி தேவதைக்குச் சிரிப்பை ஊட்டியது.

"நிலாமதி! நீங்கள் பூமியில் இருந்து பார்க்கும்போது தெரியும் உருவங்கள் உண்மையில் இங்கில்லை. சந்திரனில் உள்ள நில அமைப்புத்தான் அவ்வாறு தோற்றம் அளிக்கிறது. இளம்பிள்ளைகள் நல்ல நூல்களை வாசித்து அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும். பூமியில் இருந்து சந்திரன் எவ்வளவு தூரத்தில் இருக்கிறது தெரியுமா"? தேவதை கேள்வியை முன்வைத்தது.

தோள்களைக் குலுக்கி, விழிகளை உயர்த்தி உதடுகளைப் பிதுக்கினாள். தெரியாது என்பதற்கான பதிலாகத் தலையை ஆட்டினாள்.

"என்ன பிள்ளைகள் நீங்கள்? பாடசாலைகளில் என்ன கற்பிக்கிறார்கள்? பூமியிலிருந்து 383,000 கிலோ மீற்றர் தொலைவில் உள்ளது சந்திரன் பூமியின் துணைக் கோளாகும். இதனைத் தேடிக் கற்றுக் கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் இன்னும் ஒருமுறை உன்னை அழைத்து வருவேன். சரியா? இப்போது புறப்படுவோம்." தேவதை நிலாமதியை அவசரப்படுத்தினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"தேவதையே உங்கள் பெயரைத் தெரிந்து கொள்ளலாமா"? நிலாமதி சந்தேகத்தைச் சொன்னாள்.
"தாராளமாக என்னை டயானா என்று அழைப்பார்கள். நீ என்னை டயானா என்று கூப்பிடு. போவோமா"? நிலாமதியின் கைகளைத் தேவதை பற்றினாள்.

நீலவானில் மேகப்படலம். நட்சத்திரக் கூட்டங்கள். அவைகளுக்கு ஊடாக நீந்திப் பறந்தார்கள். ஆனந்தமாக இருந்தது. நிலாமதி இருந்த இடத்துக்கு வந்துவிட்டார்கள்.
"நிலாமதி அதோ உன் வீடு வந்து விட்டது. நீ வீட்டுக்குப் போ. நான் போய் வருகிறேன்". தேவதை மறைந்துவிட்டாள்.

"நிலாமதி... நிலாமதி...! உன்னை எங்கெல்லாம் தேடுவது? இவ்வளவு நேரமும் கூப்பிட்டது காதில் விழவில்லையா? எங்கே போனாய்."? அம்மா அருந்தவம் கேட்டவாறு பக்கத்தில் வந்தார்.



"நான் நிலாவில் சுற்றிவிட்டு வருகிறேன்". கூறுவதற்கு வாயெடுத்தாள். அப்படியே அடக்கிக் கொண்டாள். சொன்னால் அம்மா நம்பவா செய்வார்."? நிலாமதி சிரித்துக் கொண்டு எழும்பினாள்.
தனது உடலில் கிள்ளிப் பார்த்துக் கொண்டாள். வலித்தது. நிலவு வானத்தில் பவனிவந்து கொண்டிருந்தது. அதனைப் பார்த்தவாறே நின்றாள். நிலாவில் டயானா தெரிகிறாளா என்று பார்த்தாள்.

நான் சந்திரனுக்குப் போய் வந்தது யாருக்கும் தெரியாது. சொன்னால் நம்பவா போகிறார்கள். பைத்தியம் என்பார்கள். அம்மாவுக்கும் எங்கே புரியப் போகிறது? நன்றாகப் படித்தால்தான் டயானா வந்து கூட்டிப் போவார். நம்பிக்கையோடு நிலாமதி படிக்கத்தொடங்கி விட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியரின் சிறுவருக்கான பிற நூல்கள்

இல: சிறுவர் பாடல்

01 இன்பக் கனிகள்
02 பாட்டுப் பாடுவோம்
03 காகமும் தம்பியும்
04 பாடி ஆடுவோம்
05 கடலும் காவிரியும்
06 சின்னச் சின்னப் பாட்டு
07 மனதுக்கினிய பாட்டு
08 ஆனந்தமான பாட்டு
09 சகோதரராய் வாழ்வோம்
10 இசையோடு அசைவோம்
11 தம்பிக்கொரு பாட்டு
12 அறிவைத் தரும் பாடல்கள்
13 இனிக்கும் பாடல்கள்
14 அறிவொளிப் பாடல்கள்
15 தங்கைக்கொரு பாட்டு
16 ஆடிப்பாடும் பாடல்
17 ஆடி மகிழ்வோம்

சிறுவர் கதைகள்

01 பூஞ்சிட்டுக்கள்
02 சின்னத் தேவதைகள்
03 கண்ணனும் இராமனும்
04 தங்க மாம்பழம்
05 சிறகு வைத்த கதைகள்
06 சாதனையாளர்
07 அற்புதமான வானம்
08 பார்த்தேன் கதைகள்
09 மலைத்தேன் கதைகள்
10 சுவையான கதைகள்
11 சின்னச் சின்ன சிறுவர் கதைகள்
12 சந்திரன் கதைகள்
13 நிலாவில் நிலாமதி

சிறுவர் நாவல்கள்

01 பளிங்குத் தீவு
02 பயங்கொள்ளலாகாது பாப்பா
03 காட்டில் கலவரம்
04 உல்லாசப் பயணம்
05 மனதில் உறுதி வேண்டும்
06 அந்த மாணவர் உலகம்
07 துணிச்சல் மிக்க சுந்தரி
08 சுனாமி தந்த உறவு

English

01 Butterflies and children
02 The Man and the Fish
03 The Tree and the Parrot
04 The Elephants and Ants
05 The Little Spider
06 The Crow and the Cuckoo
07 Essays for Little Children
08 Essays for Kids
09 Let's Read and Write Essays

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ISBN : 978-955-5400-50-3
Price : Rs. 160/-

Printed by :
NISAAN PRINTERS (PVT) LTD. No. 64N, Peer Saibo Street, Colombo-12. TEL : 2439401, 4997221

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org